**செ. கு. எண்:088** **நாள்: 20.06.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 20.6.2017

சென்னை மாவட்டம், மாம்பலம் வட்டம், வடபழனி, தெற்கு பெருமாள் கோவில் தெருவில் உள்ள ஒரு அடுக்கு மாடி வீட்டில் கடந்த 8.5.2017 அதிகாலையில் மின் கசிவினால் ஏற்பட்ட தீ விபத்தில், திரு. பொன்னுசாமி என்பவரின் மனைவி திருமதி வேலம்மாள், திரு சுப்புராஜ் என்பவரின் மனைவி திருமதி நாகலட்சுமி, திரு ஜான் கிறிஸ்டோபர் என்பவரின் மகன் செல்வன் ஜெயின் கிறிஸ்டோ, திரு சுப்புராஜ் என்பவரின் மகன் திரு சாந்தகுமார் மற்றும் செல்வன் ஹரிபிரகாஷ் ஆகிய ஐந்து நபர்கள் காயமடைந்துள்ளனர் என்ற செய்தியை அடைந்து வருத்தமடைந்தேன்.

மேற்கண்ட துயர சம்பவத்தில் காயமடைந்துள்ள ஐந்து நபர்களின் குடும்ப வறிய நிலையை கருத்தில் கொண்டு, இந்நிகழ்வில் பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 50,000/-ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**